www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 021

30 யூன் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# டொக்டர் புவியை கே.பியிடம் தூது அனுப்பிய வி(நாய்)யகம்!



கடந்த ஒன்றரை வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் கே.பி – கோத்தபாய – பீரிஸ் தரப்பினரை புத்திஜீவிகள் என்று கூறிக்கொள்ளும் தேசவிரோதிகள் குழு சந்தித்ததன் பின்னணியில் அறிவழகன் என்றழைக்கப்படும் வி(நாய்)யகம் இருப்பதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இது தொடர்பாக தமிழர் நல வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் டொக்டர் புவியுடன் கலந்துரையாடிய வி(நாய்)யகம், இச்சந்திப்புக்கு முன்னோடியாக அவரை கொழும்புக்கு தூது அனுப்பியதாக கறுப்புக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. கொழும்பு சென்ற புவி அவுஸ்திரேலியாவுக்கும் சென்று திரும்பியுள்ளார். கொழும்பு சென்றதை மறைக்கும் நோக்குடனே இவர் அவுஸ்திரேலியா சென்று திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன்பின்னரே கே.பியை 9 பேர் கொண்ட குழு சந்தித்தது.

ஏற்கனவே கடந்த ஆண்டு செப்ரம்பர் மாதம் இலண்டனில் உள்ள சிறீலங்கா தூதுவரை டொக்டர் புவியும், ஹரோ கவுன்சிலர் தயா இடைக்காடரும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இதன் பின்னர் மேற்கு இலண்டன் வெம்பிளிப் பகுதியில் உள்ள பாம் பீச் உணவகத்தில் டொக்டர் புவி தலைமையில் காதும் காதும் வைத்தாற் போல் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இதில் டக்ளஸ் தேவானந்தாவின் மைத்துனரான டொக்டர் கே.என்.பாலன் என்பவரும் கலந்து கொண்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக பிரித்தானியா, கனடா, சுவிற்சர்லாந்து, யேர்மனி போன்ற நாடுகளில் உள்ள புத்திஜீவிகள் என்று கூறப்படும் தேசத்துரோகிகளை கொழும்புக்கு தூது அனுப்புவதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது.




தற்போது டொக்டர் அருள் குமார் தான் சென்று வந்தமையை ஒத்துக்கொண்டு தமிழ்நெற்றுக்கு செவ்வி கொடுத்துள்ளமையானது அவரின் மனச்சாட்சிக்கு பதில் சொல்லியுள்ளார். இதன்மூலம் கே.பி குழுவினரது நடவடிக்கையை அம்பலப் படுத்தியுள்ளார். ஜேர்மனியில் இருந்து கொழும்பு சென்று சந்தித்த சிறீபதி சிவனடியாரை மர்மக்குழு ஒன்று தாக்கியதாக தற்போது தகவல் தெரிவிக்கின்றது. இது போன்ற மர்மங்கள் இன்னும் வரும்.



**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தானிய தமிழர் பேரவைக்குள் லடாய்! ஜி.ரி.விக்குள் தாவிய தனம்!

கே.பியின் அறிவுரைக்கு அமைய சிறீலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு பிரித்தானிய தமிழர் பேரவையின் மூத்த தலைவர்கள் சிலர் எடுத்த முயற்சியால் ஏற்பட்ட அமளி துமளியை அடுத்து, பேரவையை விட்டு வெளியேறி ஜி.ரி.விக்குள் றூபேட் என்றழைக்கப்படும் தனம் தாவிச்சென்றுள்ளார்.

கே.பியின் துரோகச் செயல்களுக்கு உடந்தையாக விளங்கும் டொக்டர் புவி-தனம் குழுவினருக்கும், தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்து, கே.பியின் வலதுகையாக விளங்கும் வி(நாய்)யகம் என்றழைக்கப்படும் அறிவழகனின் உதவியுடன் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜி.ரி.விக்குள் தனம் தாவினார். இதனையடுத்து தனத்தை ஜி.ரி.வியின் நிகழ்ச்சி-செய்திப் பணிப்பாளராக கே.பி குழுவை சேர்ந்த ஜி.ரி.வியின் உரிமையாளரான செல்வி என்றழைக்கப்படும் சீவேந்திரநாயகம் செல்வின் நியமித்துள்ளார்.

தற்பொழுது கறுப்பிற்கு கிடைத்துள்ள புலனாய்வுத் தகவல்களின்படி, தனத்திற்கு ஜி.ரி.வியால் மாதச்சம்பளமாக 1850 பவுண்சுகள் வழங்கப்படுவதோடு, அதில் 1200பவுண்சுகள் பதியப்படாமல் வழங்கப்படுகின்றன.

தன்னை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானிய கிளைப் பொறுப்பாளராக தனம் பிரகடனம் செய்துள்ள போதும், 2007ஆம் ஆண்டின் முற்பகுதியில் அவரை பிரித்தானிய கிளையின் நிதிப்பொறுப்பாளர் பதவியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகம் நீக்கியிருந்தது.

இதன் பின்னர் சில மாதங்களுக்கு இலாகா இல்லாத பொறுப்பாளராக இயங்கிய தனம் பின்னர் பிரித்தானிய தமிழர் பேரவைக்கு அடித்து விரட்டப்பட்டார்.

கடந்த ஆண்டு மே 18இற்குப் பின்னர் ஜனநாயகம் பற்றி அடிக்கடி பேசிய தனம், தான் சுயாதீனமாக செயற்படப் போவதாக பலரிடம் தெரிவித்திருந்தார். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை இதுவரை 10 வீதமான அரசியல் வேலைகளிலேயே ஈடுபட்டதாகவும், இனி அதனை 90 வீத அரசியல் வேலையாக மாற்றுவதே தனது பணி என்று பலரிடம் தனம் பீற்றியிருந்தார்.

அதன் பின்னர் சிறீலங்கா அரசின் உளவாளியான மாணிக்கவாசகம் குணாளனை மலேசியாவிற்கு அனுப்பி கே.பி குழுவில் தன்னையும் இணைத்துக் கொண்ட தனம், பிரித்தானிய தமிழர் பேரவையை கே.பி கும்பலின் அடிவருடி அமைப்பாக மாற்ற முற்பட்டபொழுது ஏற்பட்ட அமளி துமளியை அடுத்து ஜி.ரி.விக்குள் தாவிச்சென்றிருப்பதாக தெரிய வருகின்றது.

இதற்கிடையே, ஜி.ரி.விக்குள் தனம் இணைந்து கொண்டதை அடுத்து, தனம் குழுவுடன் இணைந்து கொண்ட ஒளிபரப்பாளர் தினேஸ், தனது எதிராளியான என்.ரி.ஜெகனை அவமானப்படுத்தி நிறுவனத்தை விட்டு வெளியேற்றியிருப்பதாக தற்பொழுது தகவல்கள் கசிகின்றன.

# பெருங் 'குடி'மகன் சர்வே

கே.பியின் மற்றுமொரு வலதுகையாக விளங்கும் நோர்வேயை சேர்ந்த சர்வே, குடிபோதைக்கு அடிமையாகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒஸ்லோவில் கலாநிதி பட்டம் படிக்கும் சர்வே, தன்னை ஒரு லெப்.கேணல் தர போராளியாகவே முன்னர் பிரகடனம் செய்து வந்தார்.

அண்மையில் ஒஸ்லோவில் நடைபெற்ற களியாட்ட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட சர்வே, மது அருந்தி தனது மாதுடன் நடமானடித் தான் ஒரு பெருங்குடி மகன் என்பதை நிரூபித்துள்ளார்.

தாமரை காருண்யன் என்ற பெயரில் பொங்குதமிழ் என்ற இணையத்தளத்தில் கட்டுரை எழுதி வரும் இவரைப் பற்றிய மேலதிக தகவல்கள் அடுத்த இதழ்களில் இணைக்கப்படும்.

